# பட்டியல்

மணித்துளிகள் மறக்கச் செய்யும்
நெடுநீளப் பணிப் பட்டியல்;

பணிச் சுமையை ஏற்றி இறக்க இவ்
திருநாளின் திட்டப் பட்டியல்;

திட்டப்படி கட்டுக்குள் செய்து முடிக்க
ஆய்வாளர் தரும் தரவரிசைப் பட்டியல்;

தரநேரம் தனக்காய் ஒதுக்கும் வகையில்
விண்ணப்பிக்க விடுமுறைப் பட்டியல்;

விடுப்பெடுத்து வீட்டுடன் போய்வரத் தேடும்
இணையதள விடுமுறைதலப் பட்டியல்;

தலங்கள் சென்று, படங்கள் பிடித்து
ஆச்சு என்று வீடு திரும்பினில்
வாரங்கள் என வரவேற்கக் காத்திருக்கும்
அடுத்த கட்டப் பணிப் பட்டியல்...

அ. வேணா
வெங்கடேஷ்
28 பிப்ரவரி 2018.